Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

மலர் 18 பார்த்திப, 7-7-1945 ஆனி-மீ 24உ இதழ் 39

## பிள்ளை பெறுவது கடவுளாலா?

(பாரதிதாஸன்)

"கடவுள் சிருஷ்டிக்கிறார்; எல்லாவற்றையும். எல்லாம் எப்போதும் கடவுளால் சிருஷ்டிக்கப்படுகின்றன" என்கிறாய் தோழா! உன் வீட்டில் நேற்றுப் பிறந்த குழந்தையையும் அவர்தான் சிருஷ்டித்தார். எவை உன் கண், காது முதலியவற்றிற்குப் புலனாகிவிட்டனவோ அவைகளெல்லாம் "கடவுள் சிருஷ்டி" என்று கண்ணை மூடிக்கொண்டு எழுதிவிடலாம். ஆனால் நீ ஒரு விஷயத்தில் தவறிவிடாதே! ஒன்றுதோன்றிய பின்பு தான் அது "கடவுள் சிருஷ்டி"! தோன்றாத முன்பு அது தோன்றுவதற்கு முன்னறிவிப்பு, கடவுள்சிருஷ்டியில் இல்லை. தோற்றுவிக்குமுன் தெரிவிக்க வேண்டியது கடவுள் பொறுப்பாயிருந்தால், அதைத் தோற்றுவிக்கக் காரணத்தைச் சொல்லவேண்டிய பொறுப்பும் கடவுளுக்கு ஏற்பட்டு விடும். அதன் பிறகு கடவுள் ஏற்பாட்டின் குட்டு வெளிவந்து விடக்கூடுமல்லவா?

உன் வீட்டில் பிறந்த குழந்தை கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்று மேலே சொன்னேனல்லவா? நீயும் ஆம் என்று நம்பினாய்.

ஆகவே உன் வீட்டில் பிரசவ அறையில் கடவுளால் ஒருகுழந்தை சிருஷ்டிக்கப்பட்டதல்லவா? முதன் முதல் உன் வீட்டில் பிரசவ அறையில் உன் குழந்தையைக் கண்டாய். அதை உன் மனைவி பின் அண்டையில்தான் பார்த்தாய். அப்பிள்ளையை ஈன்றவள் யார் என்பதை நீயறிவாய். அவள் அதை ஈன்றெடுக்க உனது சம்பந்தம் இருந்தது என்பதையும் நன்றாய் அறிவாய்! ஆயினும் அக்குழந்தையை உண்டாக்கியவர் மாத்திரம் கடவுள் என்பதுதான் உனது நம்பிக்கை. சந்தோஷம் தான்! உன்னுடைய இந்த நம்பிக்கை எந்தச் சந்தர்ப்பத்திலும் மாறாதிருக்கவேண்டும். ஆனால் அதேபிரசவ அறையில் இன்னொருநாள் தகவலில்லாமல் இன்னொரு பிள்ளையை நீ கண்டாயானால், அது மற்றொருவன் பெற்றதென்றும், வளர்க்கமுடியாமல் அவன் என் தலையில் கட்ட நினைத்திருக்கிறான் என்றும், நான் இதைப் பெறவில்லை என்றும் நீ சொல்வாய் என்பதிற் சந்தேகம் இல்லை. இது மாத்திரமா? கடவுள் என்பதாக ஒன்று வந்து உன் காதில் அந்தப் பிள்ளை "நமது சிருஷ்டி ஆகையால், அதை நீ ஒப்புக்கொள்" என்று சொன்னாலும் முடியாது முடியாது; அது நான் பெற்றதல்ல; நான் பெற்றது எனக்கிருக்கிறது என்றுதான் சொல்லுவாய் என நம்புகிறேன். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் நீ அப்படிச் சொல்லுவது சரியாக இருக்கலாம். ஏனென்றால், உன்னால் ஏற்பட்ட பிள்ளைக்கு உன் சொத்துச் சேரவேண்டியதும், உன் பிள்ளைக்காக நீ உழைப்பதில் நீ ஹுஷார் அடைவதும் ஞாயம். ஆனால் ஒன்று! நீயும் உன் மனைவியும் உண்டாக்கிய உனது பிள்ளை, கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது என்று நீ, முன், நம்பிய தானது இவ்விடத்தில் ஆட்டம் கொடுக்க வில்லையா? ஆனால், உன் சொத்துஸ்வாதீனம் ஆகிய தன்மையைப் பாதிக்காத முறையில் மேலோடு உன் பிள்ளையைக் "கடவுள் சிருஷ்டி" என்று நீ சொல்வதில் உனக்கு ஒன்றும் ஆக்ஷேபணையில்லை.

நீயும், உன் மனைவியும் உண்டாக்கிய பிள்ளையைக் கடவுள் உண்டாக்கியது என்று நீ தங்கு தடையின்றிக் கூறுவதற்குப் பிரதான காரணம் மற்றொன்று உண்டு. நீ தந்த பிள்ளையை இன்னொருவன் தந்தான் என்று இன்னோர் அறிந்த மனிதனைக் குறிக்கும் போது உனக்குக் கோபம் பொங்குவதும், அதை நீ மறுக்க முற்படுவதும் ஞாயம்! ஆனால் "கடவுள் தந்தார் இந்தப் பிள்ளையை" என்று அறியாததான ஒரு கடவுளைப் பற்றிக் கூறுவதால் கோபமில்லை; நீ அதை மறுக்க முற்படவேண்டுவதில்லை. ஏன்? கடவுள் என்பது க—ட—வு—ள் என்பது மாத்திரமே என்பது உனக்குத் தெரியும். ஒரே ஒரு வார்த்தை! எதையும் படைத்த கடவுள், மக்களைப் படைத்த கடவுள், உன் பிள்ளையைப் படைத்த கடவுள்; சொன்னாலும், சொல்லாவிட்டாலும் சகலத்தையுஞ்சிருஷ்டித்துக்கொண்டேயிருக்கும் கடவுள் இருக்கிறாரல்லவா? அவர், நீயும், உனது மனைவியும் சம்மந்தமற்றிருக்கும் காலத்திற்கிடையில் உன் வீட்டுப் பிரசவ அறையில் ஒரு பிள்ளையைச் சிருஷ்டித்துப் போட்டுவிடுவாரேயானால் அதே நொடியில் என்னைக் கூப்பிடு; அப்போது தான் "கடவுள்சிருஷ்டியா?" என்ற தொடர்மொழிக்கு அர்த்தம். கட-

## ஆக்கூர் திருக்குறள் மாநாடு

18-6-45ந் தேதி ஆக்கூர் (மாயவரம் தாலுகா) செயற்குழு கமிட்டியாரால் திருக்குறள் மாநாடு பிற்பகல் 2மணிக்கு மஸ்ஜிதுக்குமுன் அலங்காரம் செய்யப்பட்ட அழகிய பந்தலில் நடைபெற்றது. அதுசமயம் திருப்பூர் தோழர் எ. எம். மொய்தீன் தலைமை தாங்கி உணர்ச்சி மிகுந்த முன்னுரைக்குப் பின் ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் எ. மைதீன்பாச்சா அவர்கள் இஸ்லாத்தின் (ஒற்றுமை) சிறப்பையும், சபிகள் நாயகத்தின் சொன்னவைகளையும், இன்றைய இஸ்லாத்தின் பிற்போக்கான நிலைமைக்குக்காரணகர்த்தர்களைக் கண்டித்தும் அழகிய முறையிலே விரிவுரையாற்றினார். அவரைப் பின்பற்றி ஈரோட்டுத் தோழர் கே. எம். பாஷா பி. ஏ., காரை எம். ஏ. யூசுப், எம். அலி (பாஷ்யன் ஆசிரியர்) டி. வி. நாராயணசாமி ஆகியவர்கள் அழகிய முறையில் சொற்பொழிவு ஆற்றினார்கள். அதன் பின்னர் மாலை 6½ மணிக்கு மஃரீபுத் தொழுகைக்காக சிறிது நேரம் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் மாலை 7½ மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு தமிழ் நாட்டுத் தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் இஸ்லாத்தின் இனிமையையும், பாகிஸ்தான் திராவிடஸ்தான் என்பது பற்றியும் 8 மணி நேரம் உணர்ச்சிததும்பக் கேட்பவர் மனம் களைததும்பப் பேசினார். கடைசியாக இரவு 11½ மணிக்கு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது. மாராட்டிற்கு மாயவரம், சீர்காழி ஆகிய பக்கத்துக் கிராமங்களிலிருந்து திராவிட முஸ்லிம் தோழர்கள் சுமார் 5000 பேர் வந்திருந்தது போற்றத் தக்கது. அதுபோன்று சுமார் 1000 (கோஷா) முஸ்லிம் பெண்கள் வந்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இம் மாநாடு ஆக்கூரில் சென்ற மாதம் நடக்கவேண்டியது; தோழர் அண்ணாதுரை அன்று வரமுடியாதக் காரணத்தால், அன்று அலங்கரிக்கப்பட்டப் பந்தல் ஒருமாத காலமாக பிரிக்கப்படாமல் எப்படியும் அண்ணாதுரையை அழைத்து வந்து மாநாடு நடத்துவது என்ற உணர்ச்சியாய் அண்ணாதுரையை அழைத்துச் சென்று இம்மாதம் மாநாடு நடத்தியது ஆக்கூர் முஸ்லிம் தோழர்களின் முயற்சியையும் ஆர்வத்தையும் காட்டுகிறது.

---

வுள் மனிதரின் சிருஷ்டியா, மனிதர் கடவுளின் சிருஷ்டியா என்ற இரண்டிலொன்றை நான் நிச்சயித்துவிட உத்தேசம்,

## சென்னை சூளையில் சீர்திருத்தத் திருமணம்

27-6-45 காலை 8½ மணிக்கு சென்னை சூளை டிப்போ தெருவில் தோழர் வி. பி. குலசேகரனுக்கும், தோழர் இ. வி. வேதவல்லி அம்மையாருக்கும், தோழர் வி. கணேசன் பி. ஏ., (ஆனர்ஸ்) தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் எம். என். எம். மூசையதீன், வ. சங்கரய்யா, எஸ். பிரகாசம், என். வி. நடராசன், அன்பழகன், பி. ஏ., எ. என். ராமன் ஆகியவர்கள் 'சீர்திருத்தம்' என்பது பற்றிப் பேசினார்கள். தோழர் கபாலமூர்த்தி வணக்கங் கூற 11 மணிக்கு இனிது முடிவுற்றது.

### நினைவு நாள் சொற்பொழிவு

சென்னை புரசைத் திராவிடர் கழகக் காரியதரிசி எஸ். டி. எம். பழனிச்சாமி தமக்கையார் மரகதம்மாள் அம்மையார் இயற்கை யெய்தியதை முன்னிட்டு 24-6-45 ஞாயிறு காலை 9 மணிக்கு புரசை கிராமத்தெரு 6-வது இல்லத்தில் நீத்தார் நினைவு நாள் சீர்திருத்த முறையில் தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், அன்பழகன் பி. ஏ., எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ. ஆகியவர்கள் இறுதிச்சடங்கு என்னும் பேரால் நடைபெற்று வரும் வீண் சடங்குகளால் திராவிடர்களின் முன்னேற்றத்திற்கேற்பட்டு வரும் இன்னல்களை எடுத்துக் காட்டி சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரையுடன் பகல் 12 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது. ஏராளமான தொழிலாளர் தோழர்களும் வந்திருந்தனர்.

---

## தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்,

1. திருப்பூர்
2. உடுமலைப்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி
6. வ. ஆ. வேலூர்

மானேஜர்,

## தொழும்பு ஆ. திராவிட லீக்

21-4-45ந் தேதி வெளிவந்த 'குடி அரசு' 10ஆம் பக்கத்தில் "லீக்கின் சப் கமிட்டியாரிடம் தோழர் டி. எஸ். பீற்றர் தம்மிடமுள்ள எல்லா கணக்குகளையும் ஒப்படைத்து விட்டதாகவும் டை சப் கமிட்டியாரின் கடிதப்படி தம்மிடமுள்ள ரூ. 21/00ம் பொது பொக்கிஷதார் தோழர் என். ஜே. டேவிட் இடம் கொடுத்துவிட்டதாகவும் வெளிவந்த செய்தியைக் கண்டு நாம் வருந்துவதாகவும், லீக்கின் அங்கீகாரமில்லாது டை ஸ்பெஷல் கமிட்டியார் வெளியிட்ட டைசெய்தி தவறானதென்றும் தோழர் என். ஜெ. டேவிட் தெரிவிக்கிறார்.

தோழர் டேவிட் அவர்கள் 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 3 நன்கொடை யளித்திருக்கிறார்.

## விதவா விவாகம்

புதுக்கோட்டை, ஜூன் 21—

இன்று காலை 12மணிக்கு விதவா விவாக சங்கத்தின் ஆதரவில் தோழர் விருத்தாசலம் செட்டியாருக்கும் தோழர் ஆனந்த வல்லிக்கும் டை சங்கத்தலைவர் தோழர் வி. பாலகிருஷ்ணன் எம். எல். சி. அவர்கள் தலைமையில் விதவா விவாகம் நடைபெற்றது.

திருமணத் தம்பதிகளை பாராட்டி தோழர் எ. எஸ். ஆறுமுகம் செட்டியார் எம். எல். சி. சொற்பொழிவாற்றும் போது வல்லநாடு செட்டியார்களின் சமூகத்தில் இது இரண்டாவது திருமணம் என்றும் தம்பதிகள் வைதீகர்களின் எதிர்ப்பை பொருட்படுத்தாது மற்றவர்களுக்கு வழிகாட்டியதைப் பாராட்டினார்.

பின்னர் டை சங்கக் காரியதரிசி தோழர் ராமையா என்பவர் விதவா விவாகத் தம்பதிகளையும் விதவா விவாகம் நடைபெறுவதற்கு தோழர் எ. எஸ். ஆறுமுகம் அவர்கள் செய்த சேவையை ஒவ்வொரு தமிழனும் போற்றவேண்டும் என்றும் சிவில் விவாக மசோதாவை ஆதரித்துப் பேசிய பின் கைம்பெண்ணின் கண்ணீர் என்னும் புத்தகத்தைத் தம்பதிகளுக்கு பரிசளித்தார்.

## திருச்சி ஜில்லா மருத்துவர் மாநாடு

டை மாநாட்டை திருச்சி ஸ்ரீரங்கத்தில் பண்டிட் எஸ். என். ஆனந்தம் அவர்கள் தலைமையில் ஜூலை மாதக் கடைசியில் நடத்துவதென்றும், டை மாநாட்டை நடத்த தோழர் டி. பி. ரெங்கராஜன், சோமு ஆகியவர்களைக் காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுப்பதென்றும், 25-6-45-ந் தேதி ஸ்ரீரங்கத்தில் தோழர் செ. கோவிந்தசாமி வைத்தியர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

# பூந்தோட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்

## பெரியார், அண்ணாதுரை சொற்பெருக்கம்

பூந்தோட்டம், ஓடாக்கநல்லூர், தேரூர், தென்பாதி திராவிடர் கழகங்கள் சார்பாக 30-6-45 சனி மாலை 6-மணிக்கு பூந்தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொதுக்கூட்டத்திற்கு 20 மைல்கள் தூரத்திலிருந்தே பல ஊர் மக்கள் திரள் திரளாக அன்று பூந்தோட்டத்திற்கு வந்தவண்ணமாகவே யிருந்தனர்.

பெரியார் அவர்கள் சிதம்பரத்திற்கு அன்று காலை வந்து சேர்ந்ததும் பல தோழர்கள் அவர்களை வரவேற்று காரில் பூந்தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவ்வூரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லும்போது ஒவ்வொரு வீட்டிலும் பெரியாருக்கு மாலை அணிவித்து பின் அவ்வூர் பஜனை மடத்திற்காக ஏற்படுத்தப்பட்டு, ஆனால் இன்று பகுத்தறிவு இடமாக மாற்றப்பட்ட ஊர்ப்பொதுவிடத்தில் தங்க வைத்து உபசரித்தனர்.

கூட்டம் மாலை 6மணிக்கு ஆரம்பமாயிற்று. பூந்தோட்டம் கழக செயலாளர், தோழர் ஆர். இல்லலக் கோவிந்தசாமியால் பிரேரேபிக்கப்பட்டு தோழர் வை. இராமச்சந்திரன் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு ஒலிபெருக்கி நன்றாக அமைக்கப்பட்டிருந்தது. பகுத்தறிவு இயக்கப்பாட்டுகள் பாடப்பட்டன. பலவூர் கழகங்கள் சார்பாகவும், ஆதிதிராவிட மக்கள் சார்பாகவும் மாலைகள் பெரியாருக்கு அணிவிக்கப்பட்டன. தலைவர் முன்னுரைக்குப்பின், பெரியார் தொண்டு என்பதைப்பற்றி தோழர் சிங்காரவேல் அடிகளும், நான் ஏன் சுயமரியாதைக்காரன் ஆனேன் என்பதுபற்றி தோழர் சம்பந்தம் அவர்களும், புராண ஆபாசம்பற்றி புதுவைத்தோழர் கன்னையா அவர்களும், சுயமரியாதை இயக்கம் அன்றும் இன்றும் என்பதுபற்றி கீடாமங்கலம் தோழர் ஆறுமுகம் அவர்களும், தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்வுபற்றி தோழர் வி. கே. சுப்பராயன் அவர்களும் சொற்பொழிவுகள் ஆற்றியபின் நீண்ட கைதட்டலுக்கிடையே பெரியார் வீரம் பொருந்திய உணர்ச்சிமிக்கதொரு சொற்பெருக்கை 2-மணி நேரம் ஆற்றினார்கள்.

சுயமரியாதை இயக்கம்பற்றி பார்ப்பனர் செய்யும் தப்புப் பிரசாரத்தின் தன்மையை விளக்கியும், அவ்வியக்கம் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டதற்கு அவசியமாக இருந்த காரணங்களை விளக்கியும், அதனால் பார்ப்பனர் அடையும் கஷ்டத்தையும், நம்மவர் அடையும் லாபத்தையும் எடுத்துக்காட்டிப் பேசினார். எதிரிகள் தன்னை நாஸ்திகன் என்றும், கடவுள் இல்லை என்று சொல்லுபவனென்றும் பாமர மக்களிடம் செய்யும் விஷமப் பிரசாரத்திற்கு பதிலளிக்கு முகத்தான் பல அரிய கருத்துக்களைத் தெளிவாக்கி கடவுளர் இன்று பல மனைவிகள் வைப்பாட்டிகள் லோலர்களாய் அன்றாட உணவிற்கும் நம் உழைப்பை நாடி நிற்கும் அவர்கள் ஒழுக்கமற்ற சோம்பேறி வாழ்க்கை, அதை வணங்கும் அதற்காகப் பொருள் செலவழிக்கும் தமிழன் தன்மானமற்று பழனி ஆண்டவன், திருப்பதி வெங்கிடாசலம் பேரால் தலை மொட்டையடித்துக்கொண்டு தரையில் புரண்டு தன் பிணி போக்க பிதற்றித் திரியும் குருட்டு நம்பிக்கை, இப்படிப்பட்ட மானமற்றவர்களை மணந்து கொண்ட குற்றத்தால் கணவர்களுக்குக் காசு கொடுத்து கூத்தியாள் வீட்டிற்கு அனுப்பும் பெண்களின் விபரீதச் செயல் ஆகியவற்றை விளக்கினார். இவைதாமா கடவுளர் லட்சணங்கள்? இக்கடவுள்களை வணங்கி வழிபடுவதுதானா பகுத்தறிவுள்ள மனிதன் செயல்? என்று கேட்டார். இந்து மதத்தின் பேரால் இங்குள்ளோர் அடைந்துவரும் இழிவு போக்கத் தமிழரனைவரும் அம்மதத்தினர் அல்ல என முடிவு செய்வதுதான் தக்கதொரு மருந்து அல்லால் தான் ஒரு இந்து என்று சொல்லிக்கொண்டே பார்ப்பானைக் குறைகூறுபவன் செயல் பகுத்தறிவுக்கொத்ததாகாதென்றும் கூறினார், அங்கு கூடியிருந்த ஆண், பெண் உள்ளிட்ட ஐயாயிர மக்கள் கொண்ட அக்கூட்டம் அதை ஆமோதித்தது. மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரம் செய்தது. மாலை 4 மணிக்கு சென்னையிலிருந்து சிதம்பரம் வருகிற ரயிலில் வந்த தோழர் அண்ணாதுரை அவர்கள், பெரியார் பேசிக்கொண்டிருக்கும்போது கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார். அவரை ஆவலுடன் எதிர்நோக்கி இருந்த மக்கள் மகிழ்ச்சிப்பெருக்குக் கொண்டனர். தலைவர் பெரியார் பேசி முடித்ததும், மருதாந்தநல்லூர் தோழர் பொன்னம்பலம் அவர்கள் பெரியார் அவர்களுக்கு 101 அணா பணமுடிப்பொன்று அளித்தார்.

பின் தோழர் அண்ணாதுரை அவர்கள் பேசினார்கள். பேசும் முன் பல கழகங்கள் சார்பாக மாலைகளும், வரவேற்பிதழ்களும் அவர்களுக்களிக்கப்பட்டன. பெரியார் யார்? பெரியார் காங்கரசிலிருந்து காந்தியார் சொற்படி கைராட்டினம் சுற்றினது, தோளில் கதர்த்துணியை சுமந்து கிராமங்கள்தோறும் சுற்றி விற்றது, மதுவை ஒழிக்கத் தென்னைமரங்களை வெட்டினது வெள்ளையன் ஒழிந்தால் இந்நாட்டிற்கு விடுதலை கிடைக்குமென்பதை நம்பி சர்க்காரை ஒழிக்கப் பன்முறை சிறை சென்றது இவற்றை மக்கள் முன் விளக்கினார். இவ்வளவும் ஆரியன் உயர்வுக்கும், தமிழன் அடிமைக்கும் பயன்பட்டது கண்டு, குருகுலப் போராட்டத்தில் பங்கு கொண்டு, பின் காங்கரசை ஒழித்தாலல்லது சயவர்கள் ஒழியார், தமிழர்கள் உணர்வு பெறார் என்ற கருத்துக்கொண்டு காங்கரசை விட்டு வெளியேறி தன்மான இயக்கம் ஆரம்பித்ததை அநேக சான்றுகளுடன் எடுத்துப்பேசினார். மின்சார விளக்கு எப்படி எரிகிறதென்றால் தெரியாதென்பான், மேல்நாட்டின் சரித்திரத்தை அறியான், ஒலிபெருக்கி ஒலிக்கும் தன்மையை உணரான், நிலத்திலும் நீரிலும் விண்ணிலும் ஊர்ந்து செல்லும் ஊர்திகள் பலவற்றின் விளக்கம் அறியான். ஆனால் எமன் எந்த வாகனத்தில் வருகிறான்? என்றால் எருமைக்கிடா பேரில் என்று உடன் பதிலளிப்பான் தமிழன் இப்படி கண்ணுக்கும் கருத்துக்கும் நின்று காட்சியளிக்கும் மற்பல பொருள்களின் பண்பை உணரமுடியாமல் அவ்விரண்டிற்கும் சம்பந்தமற்ற எண்ணமுடியாத ஒன்றை உணர்ந்தவன் போல் உளரும் தமிழனின் குருட்டாட்டத்திற்கு கோல் கொண்டு வழிவகுத்த ஆரியப் பார்ப்பனர் சூழ்ச்சி, அவர்தம் புராணப் பொய் மூ... ஆனால் அவற்றால் தடித்த தோலர்கட்... இன்று பெரியார் அளித்துவரும் ப... தறிவு வெளிச்சம் ஆகியவற்றை விளக்... னார். குக்கிராமத்தில் அம் மாபெரு... கூட்டத்தைக் கண்டு களித்தார்.

தலைவர், தளபதி இருவர் சொ... லாற்றலையும், அதிலிருந்த உண்மை... கருத்துக்களையும் கேட்டிருந்த கூட்ட... தினர் ஆரம்பத்திலிருந்து முடிவு வ... அசையவில்லை. எதிர்பாராத இனி... விருந்தை உண்டு தன்மான உணர்... பெருக தங்கள் மகிழ்ச்சியை அப்பே... நடக்கப்போது கைதட்டி ஆரவார... செய்து வெளிப்படுத்தினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் தோழ... கணபதி அவர்கள் அனைவருக்கும் நன்... கூறினார், கூட்டம் இரவு 10-30க்கு இனி... முடிவுற்றது பின் வந்திருந்த தூரத்து ம... களனைவருக்கும் உணவு தக்கபடி அளி... கப்பட்டது. இந்நிகழ்ச்சியைப் பார்த்...

## திருமணம்

வ. ஆ. ஜில்லா திராவிடர் கழகக் காரியதரிசி திருப்பத்தூர் தோழர் எம். நடேசம் பிள்ளை அவர்களின் குமாரத்தி என். சொர்ணம் அவர்களுக்கும் தோழர் ச. கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் குமாரர் தோழர் ஜி. ரங்கசாமி அவர்களுக்கும் 15-7-45 காலை 9 மணிக்கு தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் தலைமையில் வித்வான் தோழர் பி. பெரியசாமிபிள்ளை பி. ஏ., பீ. எல் அவர்களால் திருமணம் நடத்திவைக்கப்படும். தோழர்கள் வித்வான் எம். வரதராஜன், க. அன்பழகன், இரா. நெடுஞ்செழியன், ஜி. எம். அண்ணல்தங்கோ முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். மணவிழா திருப்பத்தூர், செட்டித்தெரு தோழர் ஜி. ராமசாமி முதலியார் அவர்கள் 54-ம் நெ. வீட்டில் நடைபெறும்.

## ஆர்தர் ஹோப் இஞ்சினீயரிங் கல்லூரி கோவையில் திறப்பு விழா

மேற்படி கல்லூரியின் திறப்புவிழா 9-7-45 தேதி மே. த. சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்களால் ஆற்றிவைக்கப்படும். அன்று மாலை 4-15 மணிக்கு கோவை பீளமேடு நேஷனல் எலக்டிரிக் ஒர்க்ஸ் லிமிடெட்டில் தேநீர் விருந்து நடைபெறும்.

## வ. ஆ. ஜி. திராவிட கழக கமிட்டிக் கூட்டம்

வ. ஆ. ஜி. திராவிட கழக கமிட்டிக் கூட்டம் ஒன்று 15-7-45-ஆம் தேதி ஞாயிறு மாலை 5 மணிக்கு திருப்பத்தூர் சாமி செட்டி தெரு 37 நெ. உள்ள எம். நடேச பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெறும். அதுசமயம் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டி இருப்பதால் இதையே அழைப்பாகக் கருதி எல்லாக் கமிட்டி மெம்பர்களும் வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வி. எஸ். ராசமாணிக்கம்,
ஆர்கனைசர்

## சென்னை கவர்னர் பதவி நீடிப்பு

மே. த. சென்னை கவர்னர் ஹோப் துரையின் பதவி காலம் செப்டம்பர் 12-ம் தேதி முதல் மேற்கொண்டு 6 மாத காலத்திற்கு மா. த. மன்னர்பிரானால் நீடிக்கப்பட்டிருக்கிறது.

---

வர் பங்குகொண்டவர்களனைவரும் அது பொதுக்கூட்டமென அழைக்கப்பட்ட போதிலும் மாநாட்டை ஒத்து நடத்தப்பட்டது எனப் பாராட்டிப் பேசினார். பெரியாரும் தோழர் அண்ணாதுரையும் அன்றிரவே காரில் சிதம்பரம் சென்றனர். சிதம்பரத்தில் இருந்து பெரியார் நால்குடி சென்றார்.


4-7-45 முதல் எமது மகத்தான 3-வது வாரம்.
தினசரி இரவு 10-30 மணிக்கும், ஞாயிறு மாலை 7-30 மணிக்கும்
புதுவை கேப்ளே தியேட்டரில்
நாகை திராவிட நடிகர் கழகத்தாரால்,

# சாந்தா

என்னும் சமூக சீர்திருத்த நாடகம் நடைபெறும்.
டிக்கட் விகிதம்:- 1வது வகுப்பு 1-8-0, 2வது வகுப்பு 1-2-0,
பேக்பெஞ்சு 0-12-0, பெஞ்சு 0-8-0, பால்கனி 0-5-0, தரை 0-3-0.
D. R. Manager.
தலைவர்: R. V. கோபாலன். கதை, வசனம்: மு. கருணாநிதி.



முதல் வெளியீடு. 1.
முஸ்லிம் லீக் தலைவர்

# ஜனாப் முஹம்மதலி ஜின்னாஹ்

அவர்களின் அழகிய உருவம் அமைந்த படம், பல கலரில் வெளிவந்துள்ளது
ஒன்றின் விலை 0-2-0
ஒரு படத்திற்கு 0-2-9 தபால் பில்லைகள் அனுப்பவேண்டும்.
எமது விலாசம்:— V. C. அர்ச்சுனன் C/o
R. K. குப்புராவ், லாங்பஜார், வேலூர். (வ. ஆ.)


## பாரதிதாசன் நிதி

### கோவை ஜில்லா திராவிடர் கழக அறிக்கை

தோழர்களே! நமது புரட்சிக் கவி பாரதிதாசன் நிதிக்கு பல ஜில்லாக்களிலிருந்து நிதி திரட்டுகிறார்கள். ஆகையால் நம் ஜில்லாவிலிருந்தும் நிதி திரட்ட முடிவு செய்து இருப்பதால் ஆங்காங்குள்ள நம் ஜில்லா தோழர்கள் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்
என். அர்ச்சுனன்.

முகவரி:
என். அர்ச்சுனன்,
பழையகோட்டை பங்களா,
ஈரோடு.

## பிறப்பு

கோவை ஜில்லா முஸ்லிம் லீக் காரியதரிசியும் ஜம்பை பிரைமரி முஸ்லிம் லீக் தலைவருமான ஜனாப் ஜம்பை இப்ராஹீம் சாயபு அவர்களுக்கு 29-6-45-ல் ஆண் மகவொன்று பிறந்து தாயும் சேயும் சுகமாகயிருக்கின்றனர்.

## இராஜபாளையத்தில் அண்ணாதுரை

### பாரதிதாசனுக்குப் பணமுடிப்பு

வருகிற 15-7-45-ல் தளபதி தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களின் தலைமையில் தோழர் பாரதிதாசன் அவர்களுக்குப் பணமுடிப்பு அளிக்கப்படும்.

### வாழ்க்கை ஒப்பந்தம்

இந்தி எதிர்ப்பில் சிறைசென்ற தோழர் ஆ. பி. கணபதி அவர்களின் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களின் தலைமையில் 14-7-45-ல் தோழர் ஆர். பி. ஆதிநாராயணன் இல்லத்தில் வைத்து நடைபெறும்.

---


## உடனே தேவை

தமிழ் தெரிந்தவர்களாய் எல்லாக் கிராமங்களிலும் சூப்ரெண்டெண்டுகளும், இன்ஸ்பெக்டர்களும் எடுக்கப்படுகிறது. மாதச் சம்பளம் ரூ 35 முதல் 55 வரையிலும், 20 முதல் 40 வரையிலும். டிபாசிட் ரூ 150-ம், 100ம் கட்டவேண்டும். திரும்பக்கொடுக்கப்படும். பணத்துடன் நேரில் வரவும்.

P. G. கண்ணன், U. corp, சூப்ரெண்டெண்டு மானேஜ்மெண்ட் திருவாசூர்ஜில்லா.


ரோஜா முத்தையா

## திருச்சினாப்பள்ளி சுயமரியாதை அன்பர் கூட்டம்

சென்ற 17-6-45-ந் தேதி திருச்சியில் கூடிய சுயமரியாதை அன்பர்களின் கூட்டத் தீர்மானப்படி 8-7-45-ந் தேதி மாலை 5 மணிக்கு திருச்சிக் கோட்டை திராவிட இளைஞர் கழக (ஓய். எம். டி. எ.) கட்டிடத்தில் இயக்கத் தோழர்களின் கூட்டம் நடைபெறும்.

அதுபோது கட்சியின் புனரமைப்பு, தீவிரப் பிரச்சாரம் இவை குறித்து ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். கட்சியாளர்கள் அனைவரும் வந்து கொள்ள அழைக்கிறேன்.

அத்துடன் தாலூக்காவிலுள்ள இயக்கப் பிரமுகர்கள் ஆங்காங்கு சங்கங்களைப் புதுப்பித்து அதன் விபரங்களை எனக்கு இரண்டு வாரத்திற்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தி. பொ. வேதாசலம்,
திருச்சிமாவட்ட அமைப்பாளர்.

## கோவை நகர திராவிடர் கழகம் (ஜஸ்டிஸ் கட்சி) நிர்வாகத்தேர்தல் கூட்டம்

11-7-45-ந் தேதி புதன்கிழமை இரவு 9 மணிக்கு கோவை ரங்கேகவுண்டர் வீதி, சௌடம்மன் கோவிலுக்கு எதிர்புறமுள்ள சாரதா பெண்பாடசாலையில், நகர திராவிடர் கழக நிர்வாகஸ்தர்கள் தேர்தல் கூட்டம் போட்டிருப்பதால் டை கழக அங்கத்தினர்களனைவரும் மற்றும் திராவிடர் கழக முன்னேற்றத்தில் ஆர்வமுள்ளவர்களும் இதனையே அழைப்பாகக் கருதி எல்லோரும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

எஸ். ஏ. ராஜமாணிக்கம்,
எம். பட்டிலிங்கம்.

## தமிழ் நாடு ராடிகல் டெமாக்ரடிக் மகாநாடு

தமிழ் நாடு ரடிகல் டெமாக்ரடிக் கட்சியின் முதலாவது மாகாண மாநாடு சென்னையில் ஜூலை 14, 15-ஆம் தேதிகளில் நடைபெறும். அகில இந்திய ராடிகல் கட்சியின் பொதுக் காரியதரிசி தோழர் வி. எம். தார்குண்டே பார்-ஆட்-லா தலைமை வகிப்பார். மை இந்தியா ஆசிரியர் தோழர் பிலிப் ஸ்ப்ராட் மாநாட்டைத் திறந்துவைப்பார்.

மாநாட்டை யடுத்து 16-ம் தேதி முதல் 5 தினங்களுக்கு மாகாண அரசியல் பயிற்சி முகாம் ஒன்று சென்னையில் நடைபெறும்.

## கோவை ஜில்லா திராவிடர் மாநாடு

கோவை ஜில்லா திராவிடர் கழகத்தினாதரவில் மேற்படி மாநாடு ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் நடத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

வி. பழனிச்சாமி,
எஸ். ஆர். சந்தானம்,
காரியதரிசிகள்.

## கரூர் திராவிடர் கழகம்

### வைசிராய்க்குத் தந்தி

"எங்கள் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை கலந்தாலோசியாமல் வைசிராய் அவர்கள் எந்தவிதமான தீர்மானங்கொண்டு வந்தாலும் அது தென்னாட்டிலுள்ள திராவிட மக்களை கட்டுப்படுத்தாது" என்று மே. த. வைசிராய்க்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

## "கண்ணகி"

### செந்தமிழ் மாத வெளியீடு

கோட்டாறு தோழர் கே. மதியழகன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு திருநெல்வேலியில் இருந்து முத்தையா பிள்ளை அவர்களால், ஜாதி சமய பூசலைத் தகர்க்கும், சமத்துவத்தை நிலைக்க வைக்கும், ஆரியத்தை அழிக்கும் "கண்ணகி" என்ற மாத வெளியீடு விரைவில் வெளிவரும்.

## சென்னை ஜில்லா ஷெடியூல்டு வகுப்பு சம்மேளனம்

டை சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் 8-7-45ந் தேதி மாலை 7-மணிக்கு தோழர் எம். தர்மையா தலைமையில் நடைபெறும். பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## திரு வி. உலகநாத முதலியார் மறைவு

சென்னை சாது அச்சுக்கூடத்தின் சொந்தக்காரரும் திரு வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களின் தமையனாருமான திரு வி. உலகநாத முதலியார் தம் 64-வது வயதில் 3-7-45-ந் தேதி இரவு மறைந்தார் என்பதைக் கேட்டு வருந்துகிறோம். அன்னாருக்கு ஒரு மனைவியும், இரு குமாரிகளும் உண்டு.

## கோபி மருத்துவர் மாநாடு

கோபி தாலூகா முதலாவது மருத்துவர் மாநாடு கோபி திருமுருகன் டாக்கீஸில் ஜூலை மாதம் 9-ந் தேதி தோழர் திருச்சி டாக்டர் க. பிச்சைமுத்து தலைமையில் நடைபெறும். தோழர் ஓ. மாணிக்கம் மாநாட்டைத் திறந்து வைப்பார். ஈரோடு தோழர் எஸ். அப்பாவு கொடியேற்றிவைப்பார். பண்டித எஸ். எஸ். ஆனந்தம் உருவப்படத்தைத் திருச்சி தோழர் எஸ். பார்வதி அம்மையார் திறந்துவைப்பார். ஈரோடு தோழர் என். மீனாட்சிசுந்தரம் முதலியாரவர்களும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

ரஜாவில் வந்திருக்கும் நமது
14-ம் சேனை வீரர்கள்;
**கவர்னர் யுத்த நிதியில்**
துருப்புக்கள் வசதி நிதிக்கு என்று குறிப்பிட்டு
பணம் அனுப்பப்படுவதை அறிந்தால்
ஜாப்களை ஒழித்துக்கட்ட
அதிக சந்தோஷத்துடன் போர்முனைக்குத் திரும்பிச் செல்வார்கள்
அவர்கள் தங்கள் வேலையை அறிவார்கள்
அதைப்போன்று நாமும் நமது வேலையை
உணர்ந்து நடப்போமாக

குடி அரசு

1945-ஆம் ஜூலைமீ 7உ

# காங்கரசின் முழு சரணாகதி படலம்

காங்கரஸ் வடநாட்டு முதலாளிகளினுடையவும், தென்னாட்டுப் பார்ப்பனர்களுடையவும் சுயநல ஸ்தாபனமே ஒழிய ஏழைப் பாமர மக்கள் ஸ்தாபனம் அல்ல என்பது அறிவாளிகள் நன்றாய் அறிந்த சேதியாகும். இதை சுபாஷ் சந்திரபோசும் இன்று குமார மகாத்மாவாக விளங்கும் பண்டித நேருவும், மற்றும் பல காங்கரஸ் "வீரர்"களும் பலதடவை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் காங்கரசுக்கு எதிராக காங்கரசைப் போல் அதாவது தென்னாட்டு மூளையும் வடநாட்டுப் பணமும் அரசாங்க உள் ஆதரவும் கொண்ட ஒரு பலமான ஸ்தாபனம் வேறு ஒன்றும் இல்லாததால் காங்கரஸ் எவ்வளவுதான் போலியான கொள்கைகளையும் நாணய ஈனமான நடவடிக்கையும், கண்ணியமும், நாணயமும் பொறுப்பு மற்ற மக்களின் சேர்க்கையும் கொண்ட ஸ்தாபனமாக இருந்தாலும் அதற்கு எதிராக ஒன்று எப்படிப்பட்ட உண்மைக் கொள்கைகளையும் ஒழுக்கத்தையும் நாணயத்தையும் கொண்ட ஸ்தாபனமாக இருந்தாலும் போதிய பலமற்றதாக இருக்க வேண்டியதாக ஆகிவிடுகிறது. அதோடு நமது சர்க்காரும் பணக்கார, பார்ப்பனத் தன்மை கொண்டதாக இருப்பதால் "தங்கள் இனத்தாருடன்" அதாவது காங்கரசுடன் சேர்ந்து காங்கரசைத் திருப்தி செய்வதை தங்கள் நலனுக்காகத் தாங்கள் தங்கள் ஒற்றர்களுக்கு அளிக்கும் ஊதியமாகக் கருதி காங்கரசைப் பெருமைப் படுத்தி நலம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் திக்கற்று நாதி யற்றுக்கிடக்கின்ற காங்கரசல்லாத அதாவது ஏழைப் பாமர மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட கட்டுப்பாடற்ற நிலைகுலைந்த மக்களுக்கும் சமீபகாலம் வரை காங்கரசுக்குக் கூலி ஆளாய் அடிமை ஆளாய் இருப்பதல்லாமல் வேறு வழி இல்லாமலே இருந்து வந்தது. எப்படியோ சிறிது காலமாக வடநாட்டில் முஸ்லீம்களின் கிளர்ச்சியும், தென்னாட்டில் திராவிடர்களின் கிளர்ச்சியும் ஒரு அளவுக்காவது துணிவு கொண்ட, தன்னல உணர்ச்சியே சிறிதுமற்ற "சண்டித்தன்மை" கொண்ட தலைவர்களின் தொண்டினால் பிடிவாதங்களால் அவர்களது தன்னல மறுப்புகளால் அதுவும் தங்கள் கூட்டத்தில் உள்ள சுயநல சமயசஞ்சீவித் தன்மை கொண்ட துரோகிகளாலும், இனத்தை ஏய்ப்பை விற்றும் பிழைக்கவேண்டிய ஈனர்களாலும் இவர்களது முயற்சிகள் எவ்வளவு தூரம் முட்டுக்கட்டை ஏற்பட்டும் பாதிக்கப்படாமல் தலைதூக்கி வந்ததின் பயனாய் இன்று காங்கரசின் ஏக, சர்வாதிகார ஆணவ அகம்பாவம் அழிந்து "எங்களுக்கு இடமில்லையா! எங்களை ஒழிப்பதா, நாங்கள் அழிந்து போவதா!" என்ற முகாரி மீது காங்கரஸ் இன்று உயிர்வாழ வேண்டிய நிலைமைக்கு வந்து கொண்டு இருக்கிறது.

இந்த இடத்தில் ஒரு விஷயம் வாசகர்கள் கவனிக்கத்தக்கது. அதாவது சர்க்காரார் ஒருகாலாவது காங்கரஸ் அல்லாத எந்தக் கட்சியையும் தங்களுக்கு அநுகூலமாகப் பயன்படுத்திக் கொண்டதல்லாமல் கட்சி நலன் கோரி கட்சிக்கு பலம் ஏற்படும்படி ஒரு ஆதரவும் அளித்தது கிடையாது என்பதையும், இந்த இந்திய தேசிய காங்கரஸ் என்பதும் 55-வருடங்களுக்கு முன்னால் இந்த நாட்டுப் பாமர மக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் விரோதமாக சர்க்காராலேயே துவக்கப்பட்டு தென்னாட்டுப் பார்ப்பனர் வடநாட்டுப் பனியாக்கள் ஆகியவர்கள் வசம் ஒப்புவித்து சர்க்காராலேயே எல்லாவித ஆதரவும், பெருமையும், விளம்பரமும், ஆதரவும் அளித்துவரப்பட்டது என்பதையும் பாமர மக்கள் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலையில் காங்கரசுக்கு எதிராக இந்நாட்டில் ஏதாவது ஒரு ஸ்தாபனம் ஏற்படுவதென்றால் அது பெரிதும் சர்க்காருக்கு எதிரான ஸ்தாபனம் என்று சர்க்கார் கருதும்படியாக வேண்டியதாகிவிட்டது. சர்க்கார் அப்படிக் கருதாமல் இருக்கும்படியான நிலையில் காங்கரசுக்கு எதிராக ஒரு ஸ்தாபனம் இந்நாட்டில் ஏற்படவேண்டியதாயிருந்தால் அது சுதந்திரமற்று சர்க்காருக்கு நிபந்தனை அற்ற அடிமைகள் கொண்டதாக அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் ஸ்தாபனம்போலும் அல்லது இப்பொழுது நம் நாட்டில் 'ஏற்பட்டிருக்கும் ஒரு போலி S.I.L.F. ஜஸ்டிஸ் கட்சி' ஸ்தாபனம் ஆகியவைகளைப் போல் முறையே சுதந்திரமும் பொது மக்கள் நலனைப்பற்றிய கவலையும் அற்றதாகவும் சர்க்காருக்கு வேண்டியபோது மணி அடித்த உடன் ஓடிவந்து "ஹஜர்" என்று சொல்லும் ஸ்தாபனமாகவும் சர்க்காரால் எவ்வளவு கேவலமாகவும், மதிப்புக் குறைவாகவும் நடத்தினாலும் அவைகளை சிந்தாஸ்துதியாகவும் கொள்ளும் மக்கள் கூடி அமைத்துக்கொண்டு அதன்படி நடப்பவர்களையே மனிதர்களாக அதுவும் கட்சியாகக்கூடக் கருதாமல் சர்க்காருக்கு உதவி அளிக்கும் உற்ற தோழர் மனிதர்களாகக் கருதும்படியாகத்தான் இருக்க வேண்டியதாகும். அப்படி இருந்தாலும் சர்க்கார் பூசாரிகளான பெரிய சிப்பந்திகள் இவர்களுக்கு தங்களாலான தொல்லை கொடுத்து மானத்தை வாங்கிவிடுவதில் தவறமாட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் இன்று உலக யுத்தம் நடந்த காரணத்தால் ஏற்படவேண்டியதான சில புதிய மாறுதல்களை உத்தேசித்து 5, 6 வருஷமாய் அடங்கியும், அடக்கப்பட்டும் கிடந்த கட்சிகளை அவிழ்த்துவிடவேண்டி வந்ததால் கட்சிப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை என்பவைகள் இப்போது சர்க்காரால் கிளப்பப்பட வேண்டியதாகிவிட்டன.

இதுதான் இன்று வேவல் திட்டம் என்று சொல்லப்படுவதாகும். இதில் உள்ள தத்துவம் என்னவென்று பார்த்தால் புதியதாக ஒன்றும் தென்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

# ஈ. வெ. ரா. அறிவிப்பு

ஜஸ்டிஸ்கட்சியினரின் நம்பிக்கையை இழந்தசிலர் அதாவது, சென்னையில் சர் ஷண்முகம் செட்டியார், சர் ராஜன், தோழர் ராமச்சந்திர ரெட்டியார் முதலியவர்கள் தங்களை ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதைப் பொது மக்களும், சர்க்காரும் நம்பி ஏமாந்து போகக் கூடாது என்றும், அவர்களுக்கு ஜஸ்டிஸ்கட்சியிடத்தில் எவ்வித சம்பந்தமும், உரிமையும் இல்லை என்பதோடு அவர்களுக்குப் பொது மக்கள் ஆதரவு சிறிதும் கிடையாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அவர்கள் கூட்டங்கள், அபிப்பிராயங்கள், தீர்மானங்கள் ஆகியவைகள் ஜஸ்டிஸ் கட்சியாருடையதாக ஆகாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ராமசாமி,
ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்.

---

I. 1935ம் வருஷத்திய அரசியல் திட்டப்படியே மறுதிட்டம் ஏற்படும் வரை இந்திய அரசியல் நிர்வாகம் நடைபெறவேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

II. அப்படி இருந்தாலும் அதற்கும் மோசமான நிலை என்னவென்றால் இதில் ஜனநாயகமோ மெஜாரிட்டி மைனாரிட்டியோ வகுப்பு வாரி எண்ணிக்கை நீதியோ எலக்ஷனில் வெற்றி பெற்றவன் தோல்வியுற்றவன் என்பதோ ஆகிய பேச்சு ஒன்றும் இருக்கக்கூடாது.

III. எதிர்கால பிரச்சினைகள் பற்றி சர்க்காரார் ஏற்கனவே செய்திருக்கும் முடிவுகளை ஏற்றுக்கொண்டு மேலால் நடக்க வேண்டும்.

IV. புதிய சீர்திருத்தம் எப்படி இருக்கவேண்டும் என்பதுபற்றியும் இப்போது ஒன்றும் பேசக்கூடாது என்பதோடு அதற்கு அனுகூலமாக இந்தப் புது (வேவல்) அரசியலை பயன்படுத்திக்கொள்ளவும் கூடாது.

இப்படிப்பட்ட இந்தத் திட்டத்தால் மாட்சிமைபொருந்திய மன்னர் சர்க்கார் இந்தியா பல மதங், பல ஜாதி, பல பிரிவுகள், பல கட்சிகள் கொண்ட நாடு என்பதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு அதை நிலை நிறுத்தி நாட்டுமக்களின் மொத்த மெஜாரிட்டி மைனாரிட்டி பார்க்காமல் அரசாங்கத்தில் பல ஜாதி மத வகுப்புப்படி ஆள்கள் அமர்ந்து அவர்களால் நிர்வாகம் நடக்கும்படி செய்யக் கருணையுடன் அனுமதி அளித்துள்ளார்கள். அதற்காகவாவது ஏதாவது நியாயமுறைக் கணக்கு உண்டா என்றால் அதுவும் அவரவர்கள் பலத்தையும் கனத்தின் ரோஷத்தின் தன்மையையும் பொறுத்தது என்பதுதான் கணக்காகி விட்டது.

இந்த நிலையில்,

பெரிய சமாராதனை வீட்டில் உண்ட இலைகளை கூட்டித் திரட்டி தெருவில் எறிந்ததுபோல் இத்திட்டம் "இந்தியத் தலைவர்"களுக்கு வேவல் பிரபு மூலம் எறியப்பட்டிருக்கிறது. இதைப்பற்றித்தான் இன்று இந்தியாவெங்கும் வேவல் திட்டம் என்றும், இங்கிலாந்து தேர்தல் மேடைகள் எங்கும் இந்தியாவின் நிலை என்றும் பேச்சாக இருக்கிறது. இது கூட இன்று ஏற்பட்டதற்கு அதாவது இந்த உண்ட இலைகூட வெளியில் எறியப்பட்டதற்கு காரணம் என்ன என்று சிலர் அறிய முற்படுவார்கள். இதற்கும் காங்கரசார் "நாங்கள்தான் காரணம், அதாவது நாங்கள் தண்டவாளம் பேர்த்ததும், தந்தி அறுத்ததும், ரயில் கவிழ்த்ததும், கட்டிடங்களுக்கு நெருப்பு வைத்ததும், இந்திய அதிகாரிகளைக் கொன்றதும், ரிகார்டுகளைக் கொளுத்தினதும் தான் இந்தத் திட்டம் வந்ததற்குக் காரணம்" என்பார்கள்.

இவற்றால் அதாவது காங்கரசார் இப்படி செய்ததால் "வெள்ளையனுக்கோ" இங்கிலாந்துக்கோ ஒரு காதொடிந்த ஊசியளவு நஷ்டமில்லை என்பது உலகம் அறியும். இந்தக் கிளர்ச்சி காங்கரசார் பொது மக்களை ஏய்த்து மறுபடியும் பாமர மக்களின் ஓட்டுகளை வாங்குவதற்கு ஆகச் செய்த புது மாதிரி சூழ்ச்சி என்றும், இதில் சர்க்காருக்குக் கோபம் ஏற்படாமல், ஆத்திரம் ஏற்படாமல் இருப்பதற்கு ஆக வெள்ளையர்களது சொத்து, சுகம், உயிர் ஆகிய விஷயத்தில் யாதொரு கெடுதியும் ஏற்படாமல் காங்கரசார் தாங்கள்செய்த நாச வேலையில் மிக ஜாக்கிரதையாக நடந்துகொண்டார்கள் என்பதும் எந்த மடையனுக்கும் தெரியும். ஏனெனில் வெள்ளையனுக்கு ஒரு கடுகளவு கஷ்டம் நஷ்டம் ஏற்பட்டால் அவன் இந்தியாவெங்கும் பஞ்சாப்படுகொலைபோல் ஒவ்வொரு முக்கியநகரிலும் ஒவ்வொரு "ஜலியன் வாலாபாக்" செய்திருப்பான். ஆதலால் சர்க்காரார் காங்கரசக்காரர்களின் தொல்லைக்காக இந்த வெள்ளையர் சமாராதனை பின் உண்ட இலைகளைத் தெருவில் வீசி எறியவில்லை. மற்றெதற்கு என்றால் காங்கரசுக்கு உண்மைக் கர்த்தாக்களாகிய பனியாக்களும் (வடநாட்டுவியாபாரிகளும்), பார்ப்பனர் (தென்னாட்டுப் பார்ப்பனர்களும்) சர்க்காரைக் கெஞ்சு கெஞ்சென்று கெஞ்சி அவர்களை வெளிக்கு ஒன்றுக்கு இரண்டுக்கு (மலஜலம் கழிக்கக்) கூட போகவிடாமல் சன்னை அதாவது பஸ், கார்கள் நிற்குமிடங்களில் பிச்சைக்காரர்கள், நோயாளிகள், அசிங்கமான புண், குஷ்டம் உள்ளவர்கள் வந்து "அய்யா காசு, அய்யா பிச்சை" என்று தொல்லை கொடுத்து, தொல்லை பொறுக்கமாட்டாமல் அவனை விரட்டி அடிக்கக் கூப்பாடு போடுவதைவிட ஒருகாசு கொடுத்துவிட்டால்தொல்லை நீங்கலாம், அசிங்கமும் ஆபாசமும்குறையும் என்று பிரயாணிகள் கருதுவது போல் பிரிட்டிஷார் கருதி இந்த இலையை வீசி வீதியில் எறிந்து இருக்கிறார்கள். இதுமாத்திரமல்லாமல் வடநாட்டு பனியாக்கள் பத்து லட்சக்கணக்கான ரூபாய்களை பண்டுசேர்த்து சீமைக்கு (லண்டனுக்கு) அனுப்பி அங்கும் இதேமாதிரி ஆபாச அசிங்கத்தொல்லை கொடு

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 7-7-45ந் தேதி வரை 33514 அங்கத்தினர்கள்
### ரூ. 3347—4—0 சந்தா

ஜூலை மாதம் 7-ந் தேதி வரை திராவிட கழகத்திற்கு (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 6008 | 9. சென்னை | 1822 |
| 2. தஞ்சை | 5933 | 10. மதுரை | 1481 |
| 3. சேலம் | 4554 | 11. செங்கல்பட்டு | 900 |
| 4. திருச்சி | 3985 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சில்நாடு) | 216 |
| 5. இராமநாதபுரம் | 2318 | 13. பெங்களூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2270 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1919 | | |
| 8. வட ஆற்காடு | 1844 | | |

ஆகமொத்தம் அங்கத்தினர்கள் 33514. சந்தா ரூ. 3347-4-0

க்கும்படியும் வெள்ளையர்களில் தோழர்கள் உபயதுல்லா, குப்புசாமி முதலியோர் போன்ற அருள்ள "தேசபக்தர்"களைக் கொண்டு தொல்லையும் பார்லிமெண்ட் தேர்தலில் நிற்பவர்களுக்கு எதிராக நாசுக்குச் சேஷ்டையும் செய்யும்படியும் செய்து விட்டதால் பிரிட்டிஷாருக்கு இந்தச் சமயத்தில் தங்களால் ஒன்றும் குற்றம் இல்லை என்று காட்டிக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இங்கு இந்த இலை தகராறு தீருவதற்குள் அங்கு தேர்தலும் நடந்து முடிந்து விடலாம்.

மேலும் மற்றொரு காரணம் என்னவென்றால், இந்த இலையும் இந்த வேவல் திட்டமும் எவ்வளவு இழிவானதாகவும் மானங்கெட்ட தன்மையுடையதாகவும் தந்திரமானதாகவும் இருந்தாலும் காந்தியாருக்கும் காங்கிரசுக்கும் இது வரை உதவி செய்து வந்த பனியாக்களான பிர்லாக்கள், ஷாக்கள், சத்துக்கள், டாடாக்கள், ஆச்சாரியார்கள், சாப்ருக்கள், சாஸ்திரிகள், ஜின்னாக்கள் ஆகியவர்கள் காங்கிரஸ்காரர்களைப் பார்த்து "போதும் போதும் உங்கள் வீராப்பு ஆட்டபாட்டம் மரியாதையாய் நேரில் வேவல் ஒப்புக்கொண்டு அந்த இலையைச் சுவையுங்கள் இல்லாவிட்டால் நாங்கள் எடுத்துக் கொள்வோம்; ஏனெனில், எங்கள் இலை மிக மோசமாய்ப் போய்விடும் போலிருக்கிறது" என்று மிரட்டியதாலும் "மானம் போனாலும் சரி மதி போனாலும் சரி ஈனமானாலும் சரி உங்களுக்கு இல்லாத நட்டம் எங்களுக்கு என்ன? உங்களுக்கு ஆக உங்கள் கையாள்களாக இருந்து தானே இதுவரை நாங்கள் தொண்டாற்றினோம்" என்று சொல்லிவிட்டு கீழே அடிவாரத்தில் இருந்தே சரணாகதியாய் நிர்வாணத்தோடு நின்று இரு கைகூப்பிப் பணிந்து அந்தப் பணியை வேவல் ஒப்புக்கொண்டவுடன் மலைக்கு யாத்திரைபோய் வேலனுக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகளைச் செய்கிறார்கள். இந்த "வேவல்" திட்டம் அதாவது எப்படியானாலும் சரி பதவி கொடுத்தால் போதும் என்று காங்கிரஸ் ஒப்புக்கொண்ட பிறகுதான் அது வேவல் திட்டமாக வெளியாக்கப்பட்டதே ஒழிய இதற்கு எந்த விதமான சிந்தனையோ மீட்டிங் ஆலோசனையோ செய்ததுகூட வெளிப்படுத்தப் பட்டதல்ல என்பது அந்தத் திட்டத்தைப் பார்த்தாலே தெரியவரும். அதைப் பார்க்காமலே காங்கிரஸ்காரர்கள் "எப்படி இருந்தாலும் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று வேவல் திட்டத்திற்கு ஜே போட்டதே தக்க ருஜுவாகும்.

அதன் உண்மை நிலைக்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால் ஒரு பழமொழியைச் சொல்லி விளக்குகிறோம்.

அதாவது. "முடவனுக்கு வெளிக்குப்போகவேண்டிய அவசரம் வந்தது (அவன் ஏறி இருந்த பொதி) மாட்டுக்குத் துள்ளவேண்டிய நிலைமை வந்தது" இதன் விளக்கமாவது:- ஒரு கால்இல்லாத முடவன் ஒரு மாட்டின் மீது ஏறிக்கொண்டு (பிச்சைக்கு)ப் பிரயாணம் போகும் வழியில் முடவனுக்கு வயிறு குழம்பி வெளிக்குப் போகவேண்டிய அவசியம் வந்து அடக்க முடியாமல் தவிக்கிறான், மாடு இதை அறியாமல் போய்க்கொண்டே இருக்கிறது, இவன் வெளியிறங்குவதற்குத் தகுந்தபடி மாடு தன்னைமேலே இருக்கிறவன் தட்டி ஓட்டுகிறானாக்கும் என்று கருதி சற்று முரண்டையாகப் போகிறது., இந்தச் சமயத்தில் எதிரில் ஒரு நரி பூம் என்று கத்திக்கொண்டு பிர.... என்று போயிற்று. இதைக் கண்டு மாடு மிரண்டு ஒரு துள்ளு துள்ளிற்று. அதனால் மேலிருந்த முடவன் ரோட்டோரத்தில் தொம்மென்று கீழே விழுந்தான், முடவனுக்கு நல்ல அடிபட்டது, என்றாலும் அதை அதாவது கீழே விழுந்ததையும், அடிபட்டதையும் சித்தம் லட்சியம் செய்யாமல் "அப்பா நன்றாக வெளிக்குப் போக சௌகரியம் ஏற்பட்டதே" என்று சொல்லிக் கொண்டு அவன் அடக்கமுடியாமல் தொல்லைப்பட்டுக்கொண்டிருந்த மலம் தாராளமாய் வெளியாக வசதி ஏற்பட்டதே என்று மகிழ்ச்சி அடைந்து கடவுளுக்கு நன்றி செலுத்தினான். இதுதான் அந்தப் பழமொழி விளக்கம். அது போல் காங்கிரஸ்காரர்கள் தங்கள் சூழ்ச்சி வெளியாகி தங்களது தன்மானத்தில் முடவர்களாகிவிட்டார்கள்.

சர்க்கார் தயவில்லாமல் அவர்களால் ஒரு அடி எடுத்துவைக்க முடியாத நிலை எய்திவிட்டார்கள். சர்க்கார் நிலையும் இன்னுள்ள பாமர மக்கள் எழுச்சி, முதலாளிமார்கள் வந்து தங்களை கெஞ்சுவது, இங்கிலாந்தில் தேர்தல்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஆகிய பஸ் வேகமாய் (தொல்லை கொடுப்பதாய்) இருந்ததால் அவர்கள் தள்ளி ஒதுக்கவேண்டியவர்களானார்கள்.

அதாவது எதாவது ஒரு சாக்குக் காவது "சவுக்கியமா" என்றாவதுபோல்கேட்பது காங்கரசாரிடம் பேசவேண்டியவர்களானார்கள். இதைக்கேட்டதும் காங்கரஸ்காரர்கள் அதுவே போதும் என்று கருதி தங்களுடைய மானம் போவதையும் இழிவு ஏற்படுவதையும் கருதாமல் எப்படியாவது ஜெயிலில் இருப்பதற்கு பதிலாக அதாவது ஆகாகான் மாளிகையில் இருப்பதற்குபதிலாக அரசாங்க (ஊழியர்) காரியக்காரர்கள் இருக்கும் மாளிகையில் வைத்த இடத்தில் கையெழுத்துப் போட்டு மாதம் பல ஆயிரக்கணக்காய் சம்பளம் வாங்கி பணம் கொள்ளை அடிக்கும் சவுகரியம் கிடைத்தால் போதும் என்று துணிந்து வேவலிடம் "முதலில் வேலை கொடு, பிறகு நிபந்தனை என்னமோ உனக்கு இஷ்டமானதைப் போட்டுக்கொள் நாங்கள் எதற்கும் கட்டுப்படுகிறோம்" என்று சரணாகதி அடைந்துவிட்டார்கள். இதைத் தவிர வேவல் திட்டத்திற்கு வேறு பொருள் இருக்க இடமில்லை என்பதே நமது கருத்தாகும்.

இது வெற்றிபெற்றாலும்தோல்வி அடைந்தாலும் சர்கள் ஷண்முகம், ராஜன் ரெட்டி கூட்டத்திற்கும் அந்த நிலையில் பங்கு கிடைத்தாலும் நமக்கு (திராவிடர்களுக்கு) யாதொரு பலனும் கிடையாது என்பது மாத்திரம் கல்லுப்போன்ற உறுதியாகும். ஆனால் நமக்கு ஒரு வெற்றி ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை.

நாம் கொல்லவேண்டும் என்று கருதி துணிந்து தொண்டாற்றிய 'ஜனநாயகம்' என்கின்ற பித்தலாட்டம், அதாவது பார்ப்பனருடையவும், பணக்காரருடையவும் ஆயுதமாகிய ஜனநாயகம் என்கின்ற பிசாசு செத்து மடிய வழி ஏற்பட்டு விட்டது என்பதேயாகும். இனி அது தலைதூக்குவது எளிதல்ல.

இந்தியாவில் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள், பார்சிக்கள் என்கின்ற பல மதங்களும், இந்துக்களில் மேல்ஜாதி இந்துக்கள், (ஷெட்யூல்ட் வகுப்பு) கீழ்ஜாதி இந்துக்கள் (ஜாதி இந்துக்கள்) என்கிற பல வகுப்புகளும் பிரதிநிதித்துவப்படியும் தனித்தொகுதித்துவப்படியும் அரசியல் அமைக்க சர்க்கார் ஒப்புக் கொண்டாகிவிட்டது.

மெஜாரிட்டி மைனாரிட்டி பார்க்காமல் முஸ்லீம்களுக்குப் பகுதி ஸ்தானமும் ஜாதி இந்துக்களுக்குப் பகுதி ஸ்தானமும் என்கின்றதான மதப்படி பங்கு என்கின்ற சங்கதியும் சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது.

இதைக் காங்கரசும் ஒப்புக் கொண்டுவிட்டது.

இப்பொழுது இவர்களுக்குள் இருக்கும் சண்டை (தகராறு) எல்லாம் இந்த இந்த மத, ஜாதி, வகுப்புகளுக்குப் பூரண பிரதிநிதியார் என்பதுதானே ஒழிய ஜனநாயகம் என்கின்ற மெஜாரிட்டி மைனாரிட்டி பிரச்சினையோ, ஜாதி, மத, வகுப்புக்கு தனித் தனி பிரதிநிதித்துவம் கொடுப்பது சரியா? கூடாதா? என்கின்ற பிரச்சினையோ அடியோடு செத்துவிட்டது. எண்ணிக்கையில் தான் தகராறு இருக்கிறது. இது எப்படியோ போகட்டும் இப்போது நமக்குக் கவலை இல்லை. ஏன் என்றால் இதில் நியாயம் அநியாயம் என்பது பற்றி கவலை இல்லாமல் எவன் வலிவுடையவன், எவன் போக்கிரி, எவன் தொல்லை கொடுப்பவன் எவன் சூழ்ச்சிக்காரன் என்கின்ற தன்மைகளே விகிதாசார எண்ணிக்கைக்கும், பிரிவினைப் பாத்தியத்திற்கும் யோக்கியதாம்சமாகப் பரீட்சையாக இருப்பதால் சக்தி உடையவன் தகுதியுடையவனாக ஆகிவிடுவான் என்கின்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

ஏனெனில், ஒருவன் எவ்வளவுதான் கடவுள் நம்பிக்கைக்காரனாகவும் கடவுளை தினம் பிரார்த்தனை செய்துகொண்டு தினம் கடவுளைக்கண்டு பேசுகிறவனாகவும் இருந்தாலும் அவன் தன் பணத்தைப் பெட்டியில்தான் வைக்கிறான், பெட்டியில் வைத்தாலும் திருப்தி அடையாமல் அதற்கு பூட்டும்போடுகிறான், பூட்டு இருந்தாலும் திருப்தி அடையாமல் பூட்டிய பெட்டியை ஒருவீட்டுக்குள் வைத்துப் பூட்டுகிறான். அதிகப்பணமானால் இரும்புப்பெட்டியில் வைத்து அதற்கு இரட்டைப்பூட்டு இரண்டுபேரிடம் இரண்டுவிதசாவி இருக்கும்படியான இரட்டைச் சாவி பூட்டுப்போட்டு அதிலும் திருப்தி அடையாமல் போலீசு காவல், அதிலும் திருப்தி அடையாமல் துப்பாக்கிப்போலீசு வைக்கவேண்டி இருக்கிறது. இவை எதைக்காட்டுகின்றன என்றால் இவ்விஷயத்தில் கடவுள் காவல் என்பது மரியாதைக்கு ஆக சொல்லப்படும் குறிப்புச்சொல் என்பதும் ஆனால் பந்தோபஸ்து என்பது வலிவைப் பொறுத்தது என்பதும் தெளிவாகச் சொல்லப்படுவதற்கேயாகும். அதுபோலவே நியாயம், ஸ்தாபனம், கிளர்ச்சி, என்பதெல்லாம் ஏற் உரிமைக்கு ஒரு மரியாதைக் குறிப்புச் சொல்லே தவிர அதனால் பயன் ஒன்றும் பிரமாதமாய் விளைந்துவிடுவதில்லை என்பது விளங்கிவிட்டது என்பதற்கேயாகும். ஆகையால் அதை (நியாயத்தை)ப்பெற வலிவு, சக்தி, இருக்க வேண்டும்; அதற்கு ராஜாக்கள், சர்கள், பகதூர்கள், மகாத்மாக்கள், அஹிம்சாமூர்த்திகள் போதாது.

மற்றபடி யார் வேண்டும்?
என்ன வேண்டும்?
நீங்கள்தான் சொல்லுங்களேன்!

# கம்யூனிஸ்ட் நாடகம்

காங்கரசும் 'கம்யூனிஸ்ட்டு'களும் தோளோடு தோள் பிணைந்து கொண்டு இந்த நாட்டில் 4, 5 வருஷ காலமாய் நடித்த நாடகம் யாவரும் அறிந்ததேயாகும்.

கம்யூனிஸ்ட்டுகள் என்னும் பொது உடமைக்காரர்கள் கதர் கட்டிக் கொண்டு, இராட்டினம் சுற்றிக்கொண்டு, காந்திக்கு ஜே, என்றும், காந்தியார் விடுதலை ஆக வேண்டும் என்றும், காங்கரஸ் தலைவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும், தேசிய சர்க்கார் (காங்கரஸ்காரர்கள்) ஏற்பட வேண்டும் என்றும், முட்டுக்கட்டை தீரவேண்டும் என்றும் மாநாடுகளில் தீர்மானம் செய்து கொண்டும் இருந்ததும் யாவரும் அறிந்ததேயாகும். அவை மாத்திரமல்லாமல் காங்கரசில் இருந்த பார்ப்பனர்களும் சில திராவிட வாலிபர்களுமே பெரிதும் "கம்யூனிஸ்ட்"

என்று சொல்லிக்கொண்டு திரிந்ததும் யாவரும் அறிந்ததாகும்.

அவ்வளவோடு மாத்திரமல்லாமல் காங்கரஸ் ஆட்களை சர்க்கார் விடுதலை செய்யத் துவங்கும் வரையில் "கம்யூனிஸ்ட்" கூட்டங்களுக்குக் காங்கரசார் போவதும், பேசுவதும் அப்பனொரு கட்சி, மகன் ஒரு கட்சி, அண்ணன் ஒரு கட்சி, தம்பி ஒரு கட்சி, புருஷன் ஒரு கட்சி, மனைவி ஒரு கட்சியாகக் குடும்பங்கள் கட்சிகளைப் பிரித்துக்கொண்டு கூட்டு வியாபாரம் நடத்தியதையும் இல்லை என்று யாரும் மறுக்கமாட்டார்கள்.

இப்படி இருந்த கம்யூனிஸ்டுகளை இன்று காங்கரஸ்காரர்கள் வெறுப்பது போலவும், காங்கரசில் இருந்து தள்ளுவது போலும் பேசுகிறார்கள். ஆனால் என்ன காரணத்தால் 'கம்யூனிஸ்ட்'கள் காங்கரசை வெறுக்காமலும், காங்கரஸ் தங்களை வைவதைப் பற்றிப் பதில்கூடப் பேசாமலும் இருந்து வருகிறார்கள் என்பதாகச் சிந்தித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும். அதாவது காங்கரஸ் ஸ்தாபனத்தின் மீது சர்க்கார் தடையுத்தரவு பிறப்பித்து இருந்ததால் பெரிதும் அதே ஆளு கம்யூனிஸ்ட் (வேஷங்களை) பெயர்களைச்சொல்லிக்கொண்டு காங்கரஸ் பிரசாரம் செய்துவந்தார்கள் இதில் பலருக்கு காங்கரசின் எல்லா உதவியும் இருந்தும் வந்தது. ஆனால் இப்போது காங்கரசின் தடை நீங்கப் போகிறது, பதவி வரப்போகிறது பணக்காரர்களுடைய பச்சைக் கையாளாக இருந்து தொண்டாற்றப் போகிறது என்பது வெளியாகிவிட்டது. இந்தச் சமயத்தில் கம்யூனிஸ்ட்களை காங்கரஸ் ஆதரிக்கிறது என்றால் அது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும். ஆனதால் காங்கரஸ் அந்த ஆட்களை ஏற்றுக்கொண்டு அந்தப் பெயரை அதாவது கம்யூனிஸ்ட் (பொதுவுடைமை) என்கின்றபெயரை மாத்திரம் வைத்து திட்டி வெறுத்துக்கொண்டு இருப்பதானது மற்ற மக்களை ஏய்ப்பதற்கு உதவி செய்கிறது. இதில் புதிய மாறுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. இது கம்யூனிஸ்ட்கள் என்பவர்களின் தந்திரமுமாகும், ஏனெனில் திராவிட தொழிலாளிகள்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நிதி.
இராசிபுரம் கலை வளர்ச்சிக் கழக நிதி. இவற்றிற்காக,
சலகண்டபுரம், பகுத்தறிவு நடிகர் கழகத்தாரின்

# வீரவாலி

என்னும் நாடகம் விரைவில் தோழர் பாரதிதாசன் முன்னிலையில் இராசிபுரத்தில் நடைபெறும்.

ஆரிய சூழ்ச்சி! அநாகரிகம்! கயமை!— திராவிட வீரம்! பண்பு! நேர்மை!
இவற்றை விளக்கும் பேச்சு, பாட்டு, நடிப்பு, நிகழ்ச்சிகள் நிறைந்தவை!

கதை, வசனம்:—ப. கண்ணன்.

தியேட்டர்? தலைமை? தேதி? எதிர்பாருங்கள்!

அமைப்பாளர்கள்.

பலர் இந்த பித்தலாட்டம் அறிந்து கம்யூனிஸ்ட்களிடமிருந்து விலக முன்வந்து விட்டார்கள். "அவர்களை ஏய்க்கவேண்டியும் காங்கரசுக்கும் தங்களுக்கும் சண்டை" என்று கம்யூனிஸ்டுகள் சொல்லிக்கொள்ளவேண்டியதாயிற்று. ஆதலால் இந்தப் போலிக் கம்யூனிஸ்ட்களைக் கண்டு திராவிடத் தொழிலாளிகள், வாலிபர்கள் ஏமாந்து போகக்கூடாது என்று எச்சரிக்கை செய்கிறோம்.

போலிக் கம்யூனிஸ்ட்கள் என்பதற்கு அறிகுறி அவர்கள் கதர் போட்டிருப்பார்கள்; பார்ப்பனீயத்தைக் குறை சொல்லமாட்டார்கள்; வர்ணாச்சிரம மதத்தைப் பழிக்கமாட்டார்கள்; காங்கரஸ் முதலாளிகள் வீட்டு விருந்தினர்களாகஇருப்பார்கள்; கோவில் கொள்ளைகளைப் பற்றியும் கோவில் கொடுமை, கோவில் பணம் செலவு, சங்கராச்சாரி மடாதிபதி ஆகியவைகளைப் பற்றியும் மூச்சுக்கூட விடமாட்டார்கள்; காந்தீயம், தேசியம், கம்யூனிசம் எல்லாம் ஒன்று என்பார்கள்; மூன்றுக்கும் தொண்டர்களாயிருப்பார்கள். ஜாதியின் பேரால் ஏழைகளாயிருப்பவர்களைப் பற்றியும், ஜாதியின் பேரால் ராஜபோகமனுபவித்துக்கொண்டு முதலாளிகளாயிருப்பவர்களைப்பற்றியும்பேசவே மாட்டார்கள். காட்டுச் செல்வம் தொழிலாளிகள் வருவாய் வீணாகப் பாழ்போவதைப் பற்றியும் பேசமாட்டார்கள். யந்திரத்திற்கு விரோதமானதும் தினம் ஒரு ஆளுக்கு 4 அணா கூலி உள்ளதும் உடலுழைப்புக்கு ஆதாரமானதுமான கதரை ஆதரிப்பார்கள், தினம் 5 ரூ. 10 ரூ. கிடைக்கும் யந்திரத் தொழிற்சாலை செய்யப் பிரசாரம் செய்யமாட்டார்கள். இவர்களின் யோக்கியதையை விளக்க இன்னும் என்ன வேண்டும்?

சொல்லுங்கள் பார்ப்போம்.

---

## தஞ்சைமாவட்ட திராவிட மாணவர் சுற்றுப் பிரயாணம்

8-7-45 திருத்துறைப்பூண்டி
9- பேராவூரணி
10- மதுக்கூர்
11- பட்டுக்கோட்டை
12, 13, 14 பட்டுக்கோட்டை தாலூகா
15- கடலூர்
16- பாண்டிச்சேரி
17- மீண்டும் தஞ்சைஜில்லா.

---


## ஜெயராம் காய சுத்தி லேகியம்

குன்மம், குடமல் வாதம், மலச்சிக்கலுக்கு, 1 சேர் ரூ. 4-0-0, ½ சேர் ரூ. 2-2-0.

அயக்காந்த லேகியம்

பாண்டு, சோகை, கைகால் வீக்கம், வயிற்றுப் போக்குக்கு, 1 சேர் ரூ. 5. ½ சேர் ரூ. 2-10-0

V. P. P. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
23, காசி விஸ்வநாதர் [illegible],
கும்பகோணம்.

# திராவிட நாட்டுச் செய்திகள்

தூத்துக்குடி வை. பு. அ சௌந்திர பாண்டியன் தமிழர் சமதர்ம சங்க சார்பில் 5-6-45-ந் தேதி தோழர் ஆ. செல்லத்துரை அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முதியோர் கல்வி என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள். குடி தண்ணீர் வசதிசெய்துகொடுக்கவேண்டுமென்றும், கழிவுநீரை அகற்றுவதற்கு சாக்கடை கட்டும்படி கமிஷனர் அவர்களைக் கேட்டுக் கொள்வதாகவும் முனிசிபல் பெண் பாடசாலையில் இரவில் முதியோர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுவதால் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மதுரை நாடார் மகாஜன சங்க கவுன்சில் மீட்டிங்கு சங்கக் கட்டிடத்தில் 10-6-45-ந் தேதி மதுரை தோழர் வி. வி. ஆர். செங்கராம் துரைராஜ் நாடார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 1943–44; 1944–45 ஆக இரண்டு வருஷக் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்கு கவர்ன்மெண்டு சர்ட்டிபிகேட் பெற்ற ஆடிட்டர்களை நியமித்து கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு 10-7-45-ந் தேதிக்குள் கவுன்சிலுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டுமெனவும் டை சங்கத்தின் ஜெனரல்பாடி கூட்டத்தை செப்டம்பர் மாதம் மதுரையில் கூட்டுவதென்றும் மற்றும் பல விஷயங்கள் பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருநெல்வேலி ஜில்லா அரசர்குளம் ஆதிதிராவிட மகாசன ஐக்கிய முன்னேற்றச் சங்கம் (பம்பாய் கிளைச்சங்கம்) 10-6-45-ல் தோழர் ஆ. சனமுத்து அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அரசர்குளத்தில் ஏழை மக்கள் சுமார் 1000 பேர் குடி தண்ணீர் வசதியில்லாமல் கஷ்டப்படுவதால் சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுத்துக் கொள்ளுமாறு மீண்டும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகா மோகனூர் தேவேந்திர இளைஞர் சங்கப் பொதுக் கூட்டம் திருச்சி ஜில்லா போர்டு மெம்பர் எ. கே. வேம்படி அவர்கள் தலைமையில் மாரியம்மன் கோவில் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வருஷம் சங்க ஆண்டுவிழா ஜூன் மாதம் 30-ந் தேதிக்குள் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

கரூர் மருத்துவர் சங்க பொதுக்கூட்டம் 10-6-45-ல் தோழர் எ. முத்துசாமி அவர்கள் தலைமையில் கூடியது. டை சங்கத்தின் கையிருப்பு ரூ. 3யும் பொக்கிஷதாரர்கள் பெயருக்கு கரூர் லக்ஷ்மி விலாஸ் பாங்கியில் போடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. கரூரில் முதல் வகுப்பு படிக்கும் மருத்துவகுல மாணவ மாணவிகளில் 13 பேருக்கு இலவசமாக சிலேட் புத்தகம் வாங்கிக்கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

தூத்துக்குடி சண்முகபுரம் சர். ஏ. டி. பி. செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கத்தின் சார்பாக 19-6-45-ந் தேதி தோழர் சி. சண்முகம் தலைமையில் ஓர் விசேஷ கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் டை சங்கத்தின் 4-வது ஆண்டு விழாவை ஜூலை மாதம் இறுதியில் நடத்துவதென்றும் டை ஆண்டு விழாவிற்கு பெரியார், தளபதி சி. என். ஏ., தோழர்கள் கே. கே. நீலமேகம், என். அர்ச்சுனன், பாரதிதாசன் முதலிய தலைவர்களை அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர் வாத கழகத்தாரின் செல்வம் நிலையம் படிப்பகம் தோழர் வேங்கடேஸ்வரனால் 20-6-45 தேதி சென்னை தங்கசாலை தெருவில் 195 என்னுள்ள கட்டிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. தோழர்கள் கோபால கிருஷ்ணன், ராமச்சந்திரன், கணேசன் முதலியவர்கள் மறைந்த பன்னீர் செல்வம், படிப்பகத்தின் நன்மைகள் முதலியனபற்றி விரிவுரையாற்றினார்கள்.

23-6-45ல் மோகனூர் தேவேந்திரக் கூட்டம் சங்கத்தலைவரின் கீழ் நடைபெற்றது. அதுசமயம் நடந்த தேர்தலில் தோழர் ஆர். கோவிந்தசாமி உபதலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தோழர் எம். ராமலிங்கம் புதிய மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வைஸ்ராய் நிர்வாக சபையில் ஹரிஜனங்களுக்கு விகிதாச்சாரப்படி பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லத் திறப்புவிழா 24-6-45-ந் தேதி தோழர் மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் தலைமையில் நடந்தது. டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தை அரிய சொற்பொழிவுக்குப் பின் தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் திறந்து வைத்தார். தோழர் என். ராமநாதன் அவர்கள் டை விடுதியைத் திறந்துவைத்தார். விடுதியின் காரியதரிசி தோழர் ஏ. வீராசாமி நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

பம்பாய் தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் தலைவர் தோழர் எம். வி. நாராயணசாமி அவர்கள் மே. த. வைஸ்ராய் அவர்களுக்கு 23-6-45ந் தேதி கீழ்காணும் தந்தி கொடுத்திருக்கிறார்:

"ஜாதி இந்துக்களால் ஒதுக்கப்பட்ட மக்கள், சமுதாயத்தில் நசுக்கப்பட்டும் பொருளாதாரத்தில் நெருக்கப்பட்டும் வருகின்றனர். அவர்களின் நலன்களை கவனிக்க வைஸ்ராய் நிருவாகச் சபையில் மூன்று ஸ்தானங்களாவது தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது"

சென்னை மாகாண ஷெடியூல்டு வகுப்பு பெடரேஷனின் ஜெனரல்பாடி கூட்டம் சென்னையில் 21-6-45ந் தேதி திவான் பகதூர் ஆர். சீனிவாசன் எம். எல். சி. அவர்களின் தலைமையில் கூடிற்று. டை பெடரேஷனுக்கு காரியதரிசியாக தோழர் பி. பரமேசுவரனும், உதவிகாரியதரிசியாக தோழர் பி. முத்துசாமி அவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். விரைவில் ஷெடியூல்டு வகுப்பு மாகாண மாநாடு கூட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தஞ்சை ஜில்லா பாபநாசத்தில் 25-6-45-ந் தேதி மாலை 6 மணிக்கு கே. வீரய்யா தலைமையில் மருத்துவகுல சங்க பொதுக்கூட்டம் டை சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் எஸ். தங்கையா, கே. மாரியப்பன் முதலியோர் "தொழிலாளர் ஒற்றுமையும், இனமுன்னேற்றமும்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். எஸ். தங்கையன் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிதுமுடிந்தது.

25-6-45 திங்கட்கிழமை பகல் 5 மணிக்கு சேலம் அம்மாப்பேட்டை ஐன்டின் தமிழர் சங்கக் கட்டிடச் சாவி சேலம் ஜில்லா டிப்டி கலெக்டர் உத்திரவால் எதிரிகளிடமிருந்து வாங்கி டை சங்கத் தலைவர் எ. முருகேசமுதலியார் தலைமையில் டைகட்டிடம் திறக்கப்பட்டுவிட்டது என தோழர் எ. முருகேச முதலியார் தெரிவிக்கிறார்.

பம்பாய், தாராவி அல்லிபிள்ளை வாடியில் அ. இ. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், பம்பாய் (கிளை) உதவி காரியதரிசி தலைமையில் 16-6-45-ந் தேதி நடைபெற்ற தெ. இ. ஆதிதிராவிட வாலிபர் கழகக் கூட்டத்தில் பல தோழர்கள் பேசியபின் வைஸ்ராய் அவர்களின் புதுத் திட்டம் தாழ்த்தப்பட்டோருக்குப் பாதகமானதென்றும், "தென்னாடு" இதழை வாரப்பதிப்பாக மாற்ற மத்திய சர்க்கார் அனுமதி தரவேண்டுமென்று கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கீழ்ப்பென்னாத்தூரில் 27-6-45ந் தேதி சப்ரிஜிஸ்திரார் தோழர் சுந்தர மூர்த்தி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்

கூட்டத்தில் தமிழ்நாடு ரீஜினல் சொற்பொழிவாளர் தோழர் கே. பு. அழகர்சாமி அவர்களும் தோழர்கள் நாராயணசாமி முதலியார், ஜி. என். நாயுடு ஆகியவர்களும் "ஆட்சிவல்லவர், ஆண்மை மிக்கார் தமிழ்நாட்டினர்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

* *

செங்கற்பட்டு திருக்கழுக்குன்றம் கிராமம் ஷெட்யூல்டு வகுப்பு பெடரேஷன் கூட்டம் 20-6-45-ந் தேதி தோழர் எம். பரமசிவம் தலைமையின் கீழ் நடைபெற்றது. தோழர்கள் ஏ. எஸ். ராமன், பி. குப்புராவ் முதலியவர்கள் ஷெடியூல்டு வகுப்பும் அரசியலும் என்பது பற்றிப் பேசினார்கள். இடைக்கால மத்திய சர்க்காரில் ஷெடியூல்டு வகுப்பாருக்கு 3 ஸ்தானங்கள் வழங்கவேண்டுமென்றும், இல்லையேல் ராவ்பகதூர் என். சிவராஜ் அந்தப் பதவியையும் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும், டாக்டர் அம்பேத்கார் தமது பதவியை ராஜிநாமா செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

0 0

பம்பாய் தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் நிர்வாகக் கழகத்தின் கூட்டம் 12-6-45-ந் தேதி தோழர் எம். வி. துரைசாமி அவர்கள் தலைமையில் கூடியது. கடந்த மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. தோழர்கள் பில்லிமுத்து, மு. மகாலிங்கம் நிர்வாக உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. சங்கத்தின் நிர்வாக உறுப்பினராயிருந்து உழைத்துவந்த தோழர் எம். எஸ். குருசாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

0 0

29-6-45-ந் தேதி தோழர் ஈ. என். இஸ்மாயில் திருமண வாழ்த்துக் கூட்டம் தோழர் ஜே. என். யாகூப் தலைமையில் ஈரோட்டில் கசாய வர்த்தக சங்கக் கட்டிடத்தில் நடந்தது. சித்திக் தொண்டர் படையினரால் மணமகனுக்குத் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், எஸ். ஆர். சந்தானம், எ. ஷைகுதீன்பாட்சா, சின்னத்தம்பி, ஷெரீப் மற்றும் பல தோழர்கள் மணமகனைப் பாராட்டிப் பேசினார்கள்.

0 0

உசிலம்பட்டி நாடார்களின் ஒற்றுமைக் குறைவை நீக்குவதற்காக 10-6-45-ந் தேதி கூடிய மதுரை நாடார் மகாஜன சங்கக் கவுன்சில் கூட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட கமிட்டியார் 28-6-45-ந் தேதி உசிலம்பட்டிக்குச் சென்று அங்கு ஏற்பட்டிருந்த தகராறுகளைத் தீர விசாரித்துக் கமிட்டி ஆட்சேபனைக்கேற்ற சட்டதிட்டங்களை வகுத்துக் கொடுத்து,

# அனுதாபம்

வாழ்குடை: 26-5-45-ல் காலம் சென்ற தோழர் அருணகிரி உடையார் அவர்களின் நினைவாக தோழர் கிட்டுக் கவுண்டர் தலைமையில் நடந்த அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் வி. எஸ். கிருஷ்ணசாமி, வி. தூயமணி, வி. ஆர். வெங்கடேசன் முதலியவர்கள் பேசினார்கள். அவருடைய குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. கீத்தார் கடன் புரோகிதமின்றி நடத்துவதாக அன்னாரின் குடும்பத்தார்கள் ஒப்புக்கொண்டது மகிழ்ச்சிக் குறியதே.

* *

31-5-45-ந் தேதி சென்னை சிந்தாதிரிப்பேட்டை கனியப்பன் நாயக்கன் தெருவிலுள்ள மோட்டார் இன்ஜினீயர் தோழர் சி. ஜி. எல். ரெங்கநாதம் அவர்களின் மனைவி எத்திராஜம்மாள் மாரடைப்பால் இயற்கை யெய்தார் என்பதை பறிய வருந்துகிறோம்.

* *

15-5-45ந் தேதி இயற்கையெய்த பண்ருட்டி தோழர் வி. ரங்கநாதன் அவர்களின் தந்தை தோழர் வீராசாமிநாயக்கர் அவர்களுக்காக 30-5-45-ந் தேதி தோழர் யு. டி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் தோழர் கலியாணசுந்தரம் அவர்களால் கீத்தார் நினைவு நாள் என்பதுபற்றி பேசப்பட்டது.

* *

சேலம் செவ்வாய்ப்பேட்டை தோழர் என். வி. தர்மன் அவர்களின் வாழ்க்கை துணைவியார் ராசம்மாள் 25-5-45 வெள்ளி அன்று காலமானதற்கு எவ்வித சடங்கும் இன்றி பிரேத அடக்கம் செய்யப்பட்டது. அவர்கள் குடும்பத்தாருக்கு சுயமரியாதை சங்கத்தின்சார்பாக அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

* *

சென்னை, புரசைத் திராவிடர் கழகக் காரியதரிசி எஸ். டி. எம். பழனிச்சாமியின் தமக்கையார் தோழர் வி. வி. என். மகாலட்சுமி அம்மையார் 8-6-45 மாலை இயற்கையெய்தினார். 9-6-45 மாலை யாதொரு சடங்குகளுமின்றி பிரேதம் பெட்டியில் வைக்கப்பட்டு ஓட்டேரி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அவ்வுட்டாரத்தில் இம்மாறுதல் ஒரு பெரிய உணர்ச்சியை உண்டாக்கியது. மயானத்தில் தோழர் என். வி. நடராசன் 'திராவிடரும் சீர்திருத்தமும்' என்பது பற்றிப் பேசினார். ஏராளமான இயக்கத் தோழர்கள் வந்திருந்தனர்.

* *

திருச்சி ஜில்லா மாவலிப்பட்டியில் ஆரம்ப ஆசிரியர் வேலை பார்த்து வந்த வரும் நமது இயக்க அன்பருமான தோழர் ஆர். தனுஷ்கோடி என்பவர் 21-5-45-ந் தேதி திருச்சி ஆஸ்பத்திரியில் இயற்கை யெய்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

* *

சென்னைத் தொழிலாளர் தலைவர் தோழர் வி. எஸ். தேவசுந்தரம் அவருடையவும், இந்தி எதிர்ப்புப் போரில் சிறை சென்ற வீரத் தாய்மார்களில் முக்கியமானவருமான தோழர் சரோஜனி அம்மையாருடைய குழந்தை பேபி 24-6-45 இரவு பெத்துநாயக்கன் பேட்டை பாஜியகார்லு நாயுடு தெருவிலுள்ள அவர்களது இல்லத்தில் இயற்கை யெய்திற்று. அடுத்த நாள் சவ அடக்கம் நடைபெற்றது. ஏராளமான தோழர்களும் தாய்மார்களும் வந்திருந்தனர்.

---

அதற்கேற்ற வழிவகைகளை உருவகப்படுத்தி சமாதானம் நிலவச் செய்துவிட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது.

---

## தூத்துக்குடி அன்புக்கழக ஆண்டு விழா

ஷை கழகத்தின் 4 வது ஆண்டுவிழா தோழர் வி. வி. தனுஷ்கோடி நாடார் பி. ஏ, அவர்கள் தலைமையில் 17-6-45-ந் தேதி நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் பே. அ. பொன்னையா நாடார், சோமதிநாயகம், சேக் இப்றாகிம், அப்துல் ரஹிமான், பூரண மங்களானந், எஸ். எஸ் பழனிச்சாமி ஆகியோர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தமிழ் இசைப் பாட்டுகள் தோழர் ராமச்சந்திரன் பாகவதர் அவர்களால் பாடப்பட்டது.

---

## 'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.

ரோஜா முத்தையா